அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 24/2020

எனது இலக்கம் : EST-1/MISCL/06/0032(I)
பொது சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.12.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்

## 2021 ஆம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பித்தல்

"நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்திற்கு இணங்க பயனுள்ள பிரசை, மகிழ்ச்சியான குடும்பம், பண்பாடான, ஒழுக்கமுள்ள நீதியான சமுதாயம், சுபீட்சமான தேசம் என்ற நான்கு வித குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்காகப் பத்துப் பிரகடனங்களைக் கொண்ட வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க மலரும் 2021 ஆம் ஆண்டில் இந்த இக்குறிக்கோள்களை அடைவதற்காக பொதுவான பொருளாதார இலக்குகளை நிறைவேற்றும் ஒருமித்த எண்ணத்துடன் அனைத்து அரச ஊழியர்களும் நிகழ்கால மற்றும் எதிர்காலப் பரம்பரையினரின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. அதற்காக 2021 ஆம் ஆண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் முதலாம் நாளாகிய சனவரி 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனைத்து அரச ஊழியர்களினதும் பங்கேற்புடன் விசேட நிகழ்ச்சியொன்றை நடாத்துமாறு இத்தால் ஆலோசனை வழங்குகின்றேன்.

02. அதன் பிரதான உத்தியோகபூர்வ நிகழ்வு சனாதிபதி செயலாளரின் தலைமையில் அன்றைய தினம் மு.ப. 9.00 மணிக்கு சனாதிபதி செயலக வளாகத்தில் நடைபெறும். அதனுடன் இணைந்த வகையில் அன்றைய தினத்தில் அதே நேரத்தில் பின்வரும் நிகழ்ச்சியை தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் அலுவலகங்களிலும் கொவிட்-19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக கீழே காட்டப்பட்டுள்ள வேலைத் திட்டத்தைப் பயன்படுத்த முடியும்.

I. அனைத்து ஊழியர்களினதும் முன்னிலையில் நிறுவன அல்லது அலுவலகத் தலைவர் தேசிய கொடியை ஏற்றுதல். (அனைத்து ஊழியர்களையும் ஒரே இடத்தில் ஒன்று சேர்ப்பதற்கு தடையாக அமையும் இடவசதிப் பிரச்சினைகள் இருப்பின் அனைத்து ஊழியர்களினதும் பங்கேற்பை உறுதிப்படுத்தும் விதத்தில் பொருத்தமான மாற்று வேலைத் திட்டமொன்றை பயன்படுத்த முடியும்.)
II. தேசிய கொடியை ஏற்றிய பின்னர் தேசிய கீதம் இசைத்தல்.
III. இராணுவ வீரர்கள் உள்ளிட்ட தேசத்திற்காக உயிர்த் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்வதற்காக 02 நிமிடங்கள் அமைதி பேணுதல்.
IV. அனைத்து ஊழியர்களும் தமக்கு வசதியான ஒரு மொழியில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரச சேவை உறுதிமொழியை/ சத்தியப் பிரமாணத்தை உரத்து வாசித்தல்.
V. தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரதான சுகாதாரப் பிரச்சினையான கொவிட்-19 வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக ஒவ்வொருவருக்கும், சமூகத்திற்கும் உள்ள பொறுப்புக்களை வலியுறுத்தும் உரையொன்றை சுகாதாரத் துறைசார் உத்தியோகத்தர் ஒருவரின் பங்களிப்புடன் நடாத்துதல்.
VI. சுபீட்சமான இலங்கையினுள் பயனுள்ள பிரசைகளை, மகிழ்ச்சியான குடும்பங்களை, பண்பாடான, ஒழுக்கமுள்ள நீதியான சமுதாயத்தை உருவாக்குவதற்காக ஊழியர்கள் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை நேர்மையாக, தாமதமின்றி, கடும் அர்ப்பணிப்புடன் வழங்குவதன் தேவையைத் தொனிப் பொருளாகக் கொண்ட சுருக்க உரையொன்றை நிறுவனத் தலைவர் நிகழ்த்துதல்.

03. இந்நிகழ்ச்சியை சிறப்பாக நடாத்துவதற்காக முன்னின்று நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் - கௌரவ மாகாண ஆளுநர்கள்

## அரச சேவை உறுதியுரை / சத்தியப் பிரமாணம்

இரண்டாயிரத்து இருபத்தியோராம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முதலாம் நாளாகிய இன்று, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, இலங்கை வாழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் புது வருடமொன்றின் ஆரம்பத்தைக் கொண்டாடுகின்றது.

இன்றுடன் ஆரம்பிக்கும் புது வருடத்தில்
ஒரே நாட்டில், ஒரே தேசத்தில், ஒரே கொடியின் கீழ்
ஐக்கியமாகவும் ஒருமித்த மனதுடனும்
பாதுகாப்பான எமது தாய்நாட்டினுள்
நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கை முன்னிறுத்திய
ஒழுக்கமான, சட்டத்தை மதிக்கின்ற, பண்பாடுகளைக் கொண்ட, ஆரோக்கியமான சமூகதை உருவாக்குவதற்காகவும்
நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவத்திற்கு முன்னுரிமை வழங்கும்
பௌதிக வள அபிவிருத்தியின் ஊடாக
மக்கள் மைய பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கும்
நவீன தொழில்நுட்பத்தை அறிவைப் பெற்ற மனித வளங்களை வழிநடாத்தும்
பரிசுத்தமான அரச நிர்வாகத்தின் ஒரு பங்காளரான நான்,
மக்களின் பணத்தில் சம்பளம் பெறும் ஓர் அரச ஊழியர் என்ற வகையில்
அரச கொள்கைகளையும் குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு
என்னிடம் ஒப்படைக்கப்படும் பணிகளை

வினைத்திறனுடன்,
பயனுறுதி வாய்ந்தாக,
உறுதியான எண்ணத்துடன்,
உச்ச அளவு அர்ப்பணிப்புடன்,
நேர்மையாக,
மக்களுக்குச் சார்பாக,

நிறைவேற்றுவதாக உறுதியளிக்கிறேன்/ சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்.